சுபாஷ்

-எதிர்-

உத்தரப்பிரதேச மாநில அரசு

(குற்றவியல் மேல்முறையீடு எண்.158/2022)

பிப்ரவரி 01, 2022

(மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்சய ஒய். சந்திரசூட்,

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்யா காந்த்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. விக்ரம் நாத்)

தண்டனைச் சட்டம், 1860 - பிரிவு 302/உடனிணைந்த பிரிவு 149 மற்றும் பிரிவு 148 - கொலை - ஆறு எதிரிகள் இடத்திற்கு வந்ததாகக் கூறப்படும்போது ஒரு கட்டிலில் தகவல் அளித்தவறும் அவரது சகோதரருடன் இறந்தவரும் அமர்ந்திருந்தனர் - கைத்துப்பாக்கியை வைத்திருந்த 3-ஆம் எதிரியும் மற்ற மூன்று எதிரிகளும் இறந்தவர் மீது சுட்டனர், கோடரியை வைத்திருந்த "எஸ் டி" மற்றும் கத்தியை வைத்திருந்த 6-ஆம் எதிரி தாக்கினர் - இ.த.ச., பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 149 மற்றும் பிரிவு 148-ன் கீழ் அனைத்து ஆறு எதிரிகளுக்கும் அமர்வு நீதிபதி தண்டனை தீர்ப்பளித்தார் - உயர்நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பை உறுதி செய்தது - எ.3 மற்றும் எ.6 மேல்முறையீடு செய்ததன்பேரில், முடிவு: பொருண்மைகளின் பேரில், சம்பவ இடத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 இருந்தது ஆழ்ந்த சந்தேகத்துக்குரியதாகிறது - அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியங்களில் பொருண்மை

முரண்பாடு இருப்பதை அமர்வு நீதிபதியோ அல்லது உயர்நீதிமன்றமோ கண்டறியவில்லை - சம்பவ இடத்தில் அல்லது குற்றம் நடந்த இடத்தில் இருந்ததாகக் கூறப்படும் ஒவ்வொரு சாட்சியையும் விசாரிக்க வேண்டியது அரசு தரப்பு கடமையாயில்லாவிட்டாலும் கூட பொருண்மைகளின் சூழ்நிலையில் அருகில் அமர்ந்திருந்ததாகச் சொல்லப்படும் இறந்து போனவரின் தந்தையை விசாரிக்கத்தவறியது முக்கியத்துவம் பெறுகிறது - அதன்படி மேல்முறையீட்டாளர்கள் (எ.3 மற்றும் எ.6) சந்தேகத்தின் பலனுக்கு உரியவர்கள், எனவே விடுவிக்கப்படுகின்றனர்.

மேல்முறையீடுகளை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:-

1. அ.சா.1-ன் சாட்சியத்தை ஆராயும்போது, முதல் தகவல் அறிக்கையிலும், முதல் விசாரணையின்போதும், இவ்வழக்கில் நிறுவப்பட்டுள்ளவாறு சான்றுரையின்போது, சான்றாவணங்களின் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. நாட்டுத்துப்பாக்கியுடன் இருந்த எல்லா குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பங்கு முதலில், இறந்தவரைச் சுட்டது என்பதுதான். பின்னர், குறுக்கு விசாரணையின்போது எதிரி-3-ஐப் பொறுத்தவரை அவர் வெட்டவெளியில் சுட்டார் என்றும் மற்ற 2 எதிரிகள் உள்ளபடியே இறந்தவரின் உடலில் சுட்டனர் என அ.சா.1 கூறியுள்ளார்.

2.1. அரசு தரப்பு முழு வழக்கும் என்னவென்றால் நாட்டுத்துப்பாக்கியை வைத்துள்ளதாகக் கூறப்படும் எல்லோரும் இறந்தவரைச் சுட்டனர் என்பதுதான். அரசுத்தரப்பு வழக்கானது அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் குறுக்கு விசாரணையின்போது

பெருமளவு நீர்த்துப் போனது. முக்கியமாக, சடலக் கூராய்வு அறிக்கையில் ஒரு துப்பாக்கிச்சூடு காயம் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. அது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எல்லாம் சுட்டனர் என்ற அரசுத்தரப்பு வாதத்துடன் ஒத்துப்போகவில்லை. அது தவிர, சடலக் கூராய்வு அறிக்கையில் இறந்து போனவரின் கழுத்தில் காயம் எனக் காட்டுகிறது. அது குற்றஞ்சாட்டப்பட்ட "எஸ் டி" இருவரும் கோடரியுடன் இருந்ததாகவும் மற்றும் எதிரி-6 கத்தியுடன் இருந்ததாகவும், இறந்து போனவரின் கழுத்தில் தாக்கியதாகவும் அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் வாக்குமூலத்தில் கூறுவது பொருத்தமற்றது.

2.2. இந்த பதிவுகள் உள்ள நிலையில், அ.சா.1 மற்றும் 2 சம்பவ இடத்தில் இருந்தது பெரும் சந்தேகத்துக்குரியது. அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியங்களில் உள்ள முக்கிய முரண்பாடுகள் கற்றறிந்த அமர்வு நீதிபதியாலோ அல்லது உயர்நீதிமன்றத்தாலோ காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது காணப்படவில்லை. எதிர்த்தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்ட முரண்பாடுகள் சிறிய தன்மையானது என உயர்நீதிமன்றம் கருதியுள்ளது. அரசுத்தரப்பின் அடிவேர் வரை செல்லக்கூடிய அடிப்படைத் தன்மையில் உள்ள முரண்பாடுகளுக்குத் தரப்பட்ட முடிவு, சாட்சியங்களை மதிப்பிடும் பொது ஒருவரால் ஏற்க முடியாததாக உள்ளது. குற்றம் நடந்த இடத்தில் அல்லது அந்த இடத்தில் உள்ள ஒவ்வொரு சாட்சியையும் விசாரிக்க வேண்டிய கடமை இல்லையெனினும், உண்மைகளின் சூழ்நிலைகளில், அருகாமையில் அமர்ந்திருந்ததாகக் கூறப்படும் இறந்து போனவரின் தந்தையை விசாரிக்கத் தவறியது முக்கியத்துவம் பெறுகிறது. எதிரி-

மேல்முறையீட்டாளர்கள் 3 மற்றும் 6 சந்தேகத்தின் பயனைப் பெற உரிமையுடையவர்கள்.

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : குற்றவியல் மேல்முறையீடு எண்.158/2022

அலகாபாத் உயர்நீதிமன்ற குற்றவியல் மேல்முறையீடு எண்.5307/2008-ல் 11.01.2019 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

உடன்

குற்றவியல் மேல்முறையீடு எண்.159/2022

செல்வி. மஞ்சு ஜெட்லி, சந்தன் மிஸ்ரா, ப்ரஹ்மாதண்டி ரமேஷ், செல்வி. மனிஷா சாவா, எம். விஜய பாஸ்கர், ஆகியோர் மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர்கள்.

சஞ்சய் குமார் தியாகி, செல்வி. ஹர்ஷிதா ரகுவன்ஷி, செல்வி. சலோனி தாங்கிரி ஜாவா, ஆகியோர் எதிர்மேல்முறையீட்டாளருக்கான வழக்குரைஞர்கள்.

இந்நீதிமன்ற தீர்ப்புரையானது, மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. தனஞ்சய ஒய். சந்திரசூட் அவர்களால் பகரப்பட்டது.

A பொருண்மைகள்.....2*

B வாதுரைகள்.....5*

C பகுப்பாய்வு.....9*

1. அனுமதி வழங்கப்பட்டது.

A பொருண்மைகள்

2. அலகாபாத்திலுள்ள உயர்நீதிமன்ற நீதியர் அமர்வு, குற்றவியல் மேல்முறையீடு எண்.5307/2008-ல், 11.01.2019 தேதியன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையிலிருந்து இம்மேல்முறையீடுகள் எழுகின்றன.

3. டாடாகஞ்ச் காவல்நிலையம், படௌன் மாவட்டத்தில், 1860-ஆம் ஆண்டு, இந்திய தண்டனைச் சட்டம் (இ.த.ச.) பிரிவு 148 மற்றும் பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 149 ஆகியவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கு எண்.61/2002-லிருந்து எழுகின்ற அமர்வு விசாரணை எண்.499/2002-ல் 30.09.2008 தேதியன்று வழங்கப்பட்ட படௌன் அமர்வு நீதிபதியின் தீர்ப்புரையிலிருந்து இம்மேல்முறையீடு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 148 மற்றும் பிரிவு 302/149-ன் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்கள் செய்ததற்காக, ராஜாராம், ராஜேஷ், சுபாஷ், ராம்பால், ஷிவ் தயாள் மற்றும் கியான்வதி ஆகியோருக்கு அமர்வு நீதிபதி தண்டனைத் தீர்ப்பு வழங்கினார். அவர்களுக்கு, பிரிவுகள் 302/149-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக ஆயுள் தண்டனையையும், இ.த.ச., பிரிவு 148-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக இரு ஆண்டுகளுக்கு கடுங்காவல் தண்டனையும் வழங்கப்பட்டது.

4. 16.02.2002 அன்று அ.சா.1 வேத்ராம்-ஆல் தாக்கல் செய்யப்பட்ட புகாரின்பேரில் 14.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை (மு.த.அ) பதிவு செய்யப்பட்டது. சம்பவம் நடந்த நாளன்று 11.00 மணிக்கு தகவல் அளித்தவர், கிராமக்கிணறு அருகில் ஒரு கட்டிலில் தனது சகோதரரான சுரேந்தருடன் அமர்ந்திருந்ததாகவும் அவரது தந்தை மாடியில் அமர்ந்திருந்ததாகவும் மு.த.அ.-

வில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த நேரத்தில், அந்த இடத்திற்கு ராஜாராம் மற்றும் ராஜேஷ் கைதுப்பாக்கியுடனும், சுபாஷ் மற்றும் ராம்பால் நாட்டு துப்பாக்கியுடனும், ஷிவ் தயாள் கோடரியுடனும் ராஜாராமின் மனைவியான கியான்வதி கத்தியுடன் வந்துள்ளனர். ராஜாராம், ராஜேஷ், சுபாஷ் மற்றும் ராம்பால் அவர்களது கைத்துப்பாக்கி மூலம், அவரது சகோதரர் சுரேந்தரை நோக்கி சுட்டள்ளனர். கோடரியுடன் இருந்த ஷிவ் தயாளும், கியான்வதியும் சுரேந்தரை கழுத்தில் தாக்கியதாகக் கூறப்படுகிறது. அவர் அவரது வீட்டை நோக்கி ஓடியதாக குறிப்பிட்டதுடன், அவரது தந்தை மாடியில் இருந்ததாகவும் மற்றவற்றிற்கிடையே தகவல் அளித்தவர் கூறினார். குற்றம்சாட்டப்பட்டவர் எதிர்ப்பு காரணமாக, சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார் எனக் கூறப்படுகிறது. இறந்துபோனவர், ராஜேஷின் தந்தையின் கொலையில் குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் அதற்கான விசாரணை நடந்து வருவதாகவும் தகவல் அளித்தவர் குறிப்பிட்டார்.

5. விசாரணையின்போது அரசுத்தரப்பு வழக்கானது முக்கியமாக அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியங்களிலேயே முதன்மையாக அமைந்திருந்தது. 17.02.2002 அன்று அ.சா.4-ஆன மருத்துவர். ஆர்.கே.ரோஹத்கி அவர்களால் இறந்தவரான சுரேந்தர் மீது சடலக் கூராய்வு நடத்தப்பட்டது. அரசுத்தரப்பால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளுக்கு மத்தியில், வேத்ராம் தகவல் அளித்தவராவார், அவ்வாறிருக்கையில் கிராமக்குட்டையிலிருந்து கடந்து போகும்போது அந்த நிகழ்வை பார்த்ததாகக் கூறும் ஜகதீஷ் கண்ணுற்ற சாட்சியாக கூறப்படுகிறது.

6. சடலக் கூராய்வில் இறந்தவர் மீது பின்வரும் ஒன்பது காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது:

"1. வலது முழங்கையின் மணிக்கட்டுக்கு மேல் உள்ள சதையில் 5.0 செ.மீ x 2.0 செ.மீ அளவிலான உள்பகுதியின் பின் பக்கவாட்டில் காயம்.

2. கழுத்து நடுப்பகுதியின் வெளிப்புறத்தின் முதுகுத்தண்டில் 9.0 செ.மீ x 3.0 செ.மீ ஆழம் கொண்ட காயம்.

3. இடது சட்டைக்கையின் முழங்கைக்குக்கீழ் 1.0 செ.மீ x 0.5 செ.மீ x 11.0 செ.மீ அளவுடைய பின்பக்கவாட்டில் ஆழமான காயம்.

4. இடது சட்டைக்கையின் மணிக்கட்டுக்குமேல் 3.0 செ.மீx 0.5 செ.மீ x 6.0 செ.மீ ஆழமான பின்பக்கவாட்டு காயம்.

5. இடதுபுறம் உதட்டுக்குக் கீழ் 8.0 செ.மீ x 8.0 செ.மீ x 1.0 செ.மீ ஆழமான காயம் இருந்தது.

6. வலதுபுறத்தின் மேல் உதட்டில் சதைப்பகுதியில் 2.0 செ.மீ x 0.5 செ.மீ அளவிலான காயம்.

7. மார்பின் பின் வலது பகுதியில் 4.0 செ.மீ x 3.0 செ.மீ ஆழமான துப்பாக்கிச்சூட்டின் காயமும், வலது மார்பு காம்பைச் சுற்றி 8 செ.மீ அளவுக்கு கருங்காயம் உள்ளது.

8. மண்டையோட்டின் வலதுபுறத்தில் 4.0 செ.மீ x 2.0 செ.மீ மற்றும் 10 செ.மீ ஆழமுடைய காயம்.

9. முகத்தின் இடப்புறத்தில் 7.0 செ.மீ x 2.5 செ.மீ அளவிலான மற்றும் காதில் 3.0 செ.மீ அளவிலான கன்றிய காயம்."

7. அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியத்தை அடிப்டையாகக் கொண்டு அமர்வு நீதிபதி எதிரிகளை குற்றவாளி என கண்டறிந்தார். அமர்வு நீதிபதி தீர்மானித்ததாவது:-

(i) அரசுத் தரப்பில் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் இறந்து போனவர், ராஜேஷின் தந்தை கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் என நிரூபிக்கப்பட்டது. ராஜேஷ், சுபாஷ், ராஜாராம், ராம்பால் மற்றும் கியான்வதி ஆகியோர் குடும்பத்தில் உறுப்பினர்களாகவும், உறவினர்களாகவும் இருந்ததால் ராஜேஷின் தந்தையின் மரணத்திற்கு பழிவாங்குவதற்காக இறந்தவரை கொலை செய்யும் உள்நோக்கம் இருந்தது என்பதாகும்;

(ii) அ.சா.1 தனது சகோதரரைக் காப்பாற்றவில்லை, எந்தக்காயமும் அடையவில்லை என்ற சங்கதி அவர் கண்ணுற்ற சாட்சி இல்லை எனக் குறிப்பிடாது. ஆயுதமில்லாத நபர் என்ற நிலையில், அவரது சகோதரரைக் காப்பாற்ற அ.சா.1 எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பது இயல்பானது; மற்றும்

(iii) இறந்தவர் ஒரே ஒரு துப்பாக்கி காயம்தான் அடைந்துள்ளார் என்ற மருத்துவ சான்று அ.சா.1-ன் வாக்குமூலத்தோடு ஒத்துப்போகிறது.

ராஜேஷ் மற்றும் ராஜாராம் இறந்தவரை சுட்டனர், அவ்வாறிருக்கையில் சுபாஷ் மற்றும் ராம்பால் வெட்டவெளியில் சுட்டனர் என்று அ.சா.1 குறிப்பிட்டார். எனவே, நெருங்கிய தொலைவில் துப்பாக்கிச் சூடு நிகழ்ந்தது என்றும், சாதாரண நபரால் சுடப்பட்ட நேரம் குறித்து உறுதி செய்ய முடியாது என்றும் நிரூபிக்கப்பட்டன.

8. அமர்வு நீதிபதியால் பதிவு செய்யப்பட்ட காண்முடிவுகள் மற்றும் தண்டனைத் தீர்ப்பு, மேல்முறையீட்டில் உயர்நீதிமன்றத்தால் அதன் 11.01.2019 எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

B வாதுரைகள்

9. மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான வழக்குரைஞர் திரு. சந்தன் மிஸ்ரா மற்றும் உத்தரப்பிரதேச மாநில அரசு சார்பாக முன்னிலையான வழக்குரைஞர் திரு. சஞ்சய் குமார் தியாகி ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டோம்.

10. இந்நீதிமன்றத்தின் முன் உள்ள இரு மேல்முறையீடுகளும் சுபாஷ் (எதிரி 3) மற்றும் கியான்வதி (எதிரி 6) ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான திரு. சந்தன் மிஸ்ரா, சாட்சியத்தில் கடுமையான முரண்பாடுகள் உள்ளன என்றும் அது எதிரி-மேல்முறையீட்டாளர்களை விடுவிக்க ஏதுவாகிறது என்றும் வலியுறுத்தினார். இம்மேல்முறையீடுகளுக்கு ஆதரவாக கீழ்கண்ட வாதங்களை வலியுறுத்தினார்:

(i) எதிரி ராஜேஷின் தந்தையின் கொலை வழக்கில் அ.சா.1 வேத்ராம் குற்றஞ்சாட்டப்பட்டார். இறந்துபோன சுரேந்தர் தாக்கப்பட்ட பொது குற்றம் நடந்த இடத்தில் கண்ணுற்ற சாட்சியாக அ.சா.1 இருந்துள்ளார் எனக் கூறப்படுகிறது. அ.சா.1 மற்றும் இறந்துபோனவரும் ராஜேஷின் தந்தை கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக இருப்பதால், மற்ற பக்கத்தைச் சேர்ந்த பெரிய கும்பல் சுரேந்தரை துப்பாக்கி ஆயுதம், கோடரி காற்றும் கத்தியால் தாக்கியபோது அவரை மட்டும் விட்டுவைப்பது நடந்திருக்காது;

(ii) குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973, பிரிவு 161-ன் கீழ் உள்ள வாக்குமூலமான அ.சா.1-ன் புகாரையும், முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இரண்டிலும் சொல்லப்பட்ட வாக்குமூலத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அ.சா.1-ன் வாக்குமூலம் மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக தெரிகிறது;

(iii) கிராமக்குட்டையிலிருந்து திரும்பும்போது குற்றத்தைப் பார்த்ததாகக் கூறுவது அ.சா.2 ஜகதீஷ் சந்தர்ப்ப சாட்சியாகும். சம்பவத்தின் உண்மை விபரங்களை அவர் அறியவில்லை என்றும், உண்மையில், அவரது வாக்குமூலத்தின்போது, இவ்வழக்கை உறுதி செய்துள்ளார் என்றும் அ.சா.2-ன் வாக்குமூலம் குறிப்பிடுகின்றது;

(iv) சடலக் கூராய்வு அறிக்கையில் பதிவு செய்யப்பட்ட காயங்கள் ஒரு துப்பாக்கி சூடு மட்டும் மற்றும் இறந்து போனவர் கழுத்தில் ஏற்பட்ட காயம் என்பதையே காட்டுகிறது. கழுத்தில் ஏற்பட்ட ஒரே ஒரு காயத்தின் தன்மையை வைத்து, ஷிவ் தயாள் மற்றும் கியான்வதி இருவரும் இறந்து போனவரின் கழுத்தில் தாக்கினர் என்கிற அரசு தரப்பு வழக்கு பொய்யாக்கப்பட்டது;

(v) சடலக் கூராய்வின்போது இறந்தவர் உடலில் ஒரே ஒரு துப்பாக்கி காயம் உள்ளது என்ற உண்மை, இறந்துபோனவரின் உடலை நோக்கி குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து நபர்கள் சுட்டதாகக் கூறும் அரசுத்தரப்பு வாதம் பொய்யாயிருக்க வேண்டும்.

(vi) அ.சா.1 கண்ணுற்ற சாட்சியாக இருப்பது குறித்து கடுமையான சந்தேகம் உள்ளது மற்றும் அவரது கூற்று பெருமளவு சந்தேகத்திற்குள்ளாகும் ஒரே சாதாரண காரணத்திற்காக சந்தர்ப்பவாத சாட்சி அ.சா.2-ன் சாட்சியம் நம்பமுடியாததாக உள்ளது.

(vii) சம்பவ இடத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் இறந்தவரின் தந்தையான சேத்ராம்-ஐ விசாரிக்கத் தவறிய அரசு தரப்பின் செயல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

12. மாறாக, உத்தரப்பிரதேச மாநில அரசு சார்பாக முன்னிலையான நிலையான வழக்குரைஞர் திரு. சஞ்சய் குமார் தியாகி, உயர்நீதிமன்றம் தமது

எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் பதிவு செய்த முடிவுகளை வற்புறுத்த முயன்றார். மேல்முறையீட்டாளர்களின் சார்பாக குறிப்பிடப்பட்டுள்ள முரண்பாடுகள் தண்டனைத் தீர்ப்பை உறுதி செய்த போது உயர்நீதிமன்றத்தால் தீர்மானித்தபடி, சிறு குற்றத் தன்மையுடையது என வழக்குரைஞர் சமர்ப்பித்தார். எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் உயர்நீதிமன்றம் தெரிவித்த கருத்து:

(i) அ.சா.1-ன் வாக்குமூலம் முதல் தகவல் அறிக்கையுடன் ஒத்துள்ளது. முதல் தகவல் அறிக்கையில், அ.சா.1, அனைத்து நான்கு எதிரிகளும் தங்களது ஆயுதங்களால் சுட்டுள்ளனர் என்றும், இருப்பினும் அவர் தம் குறுக்கு விசாரணையில், இறந்து போனவர் மீது ராஜேஷ் மற்றும் ராஜாராம் மட்டுமே சுட்டனர், சுபாஷ் மற்றும் ராம்பால் வெட்டவெளியில் சுட்டனர் என்றும் அவர் கூறியுள்ளார். அ.சா.1-ன் நம்பகத்தன்மையை பாதிக்காத அவை சிறிய முரண்பாடுகள் ஆகும்;

(ii) குற்றஞ்சாட்டப்பட்டவர் 5 அல்லது 6 அடி தூரத்திலிருந்து சுட்டார் என அ.சா.1 கூறியுள்ளபோதிலும், அ.சா.2, 20 கஜ தூரத்திலிருந்து சுட்டதாகக் கூறியுள்ளார். மருத்துவ சாட்சியத்தின்படி அ.சா.2-ன் வாக்குமூலம் நம்பத்தகுந்ததல்ல. இருப்பினும், அ.சா.2, நிகழ்வு நடந்து 4 ஆண்டுகள் கழித்து விசாரிக்கப்பட்ட நாட்டுப்புறத்தான் ஆவார். எனவே, அ.சா.2-ன் வாக்குமூலத்தை முழுவதுமாக நிராகரிப்பதற்கு இந்த முரண்பாடுகள் போதுமானதாக இல்லை;

(iii) 5 முதல் 6 அடி தூரத்திலிருந்து சுட்டப்பட்டுள்ளது என்ற அ.சா.1-ன் சாட்சியம், அருகிலிருந்து சுடப்பட்ட காயம் என்பதைக் காட்டும் வகையில் துப்பாக்கி சூடு காயத்தைச் சுற்றி கறுப்பாயுள்ளது என்கிற மருத்துவ சாட்சியத்துடன் ஒத்துப்போகிறது;

(iv) குற்றம் நடந்த இடத்திலிருந்து எந்த ஆயுதமும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் குற்றத் தண்டனை நிலைநிறுத்த முடியாத அளவுக்கு இன்றியமையாக்கூறு அல்ல; மற்றும்

(v) அவள் பெண்ணாக இருப்பதால் மற்ற குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுடன் சேர்ந்திருக்கமாட்டார் என்ற காரணத்தால் மட்டுமே எதிரி கியான்வதி குற்றத்தில் பங்கு பெற்றது சந்தேகப்பட முடியாது. அவள் கத்தியுடன் இருந்தார் மற்றும் இறந்தவரின் கழுத்தில் குத்தினார் என்கிற இரு சாட்சிகளின் அறிக்கை மருத்துவ சாட்சியத்துடன் ஒத்துப்போகிறது.

13. நாம் இப்போது எதிர்வாதங்களை பரிசீலிப்போம்.

C பகுப்பாய்வு

14. அரசுத்தரப்பு வழக்கு முழுதும் அவசியமாக அ.சா.1 மற்றும் அ.சா.2 வாக்குமூலத்தின் அடிப்படையில் உள்ளது. தகவல் அளித்தவரான அ.சா.1 வேத்ராம் அவரது வாக்குமூலத்தின் போது, எதிரி ராஜேஷின் தந்தை கொலை வழக்கில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். அந்த வழக்கில், இறந்தவரான சுரேந்தர், அ.சா.1

வேத்ராம் போல குற்றஞ்சாட்டப்பட்டவர் முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் குறித்து வேத்ராம் குறிப்பிட்டது யாதெனில், சம்பவம் நடந்த தினத்தன்று, சுமார் 11 மணி அளவில், கிராமக் கிணறு அருகே இறந்துபோனவருடன் கட்டிலில் உட்கார்ந்திருந்தபோது, ராஜாராம், ராஜேஷ், சுபாஷ் மற்றும் ராம்பால் நாட்டுத் துப்பாக்கியால் சுட்டனர் மற்றும் அந்த குண்டுகள் அவரது சொகத்தறார் சுரேந்தரைத் தாக்கியது. மேலும் ஷிவ் தயாள் கோடரியுடனும் மற்றும் கியான்வதி (ராஜாராமின் மனைவி) கத்தியுடனும் இறந்து போனவரின் கழுத்தில் தாக்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார். முதல் விசாரணையின்போது, ஷிவ் தயாள் மற்றும் கியான்வதி இருவரும் இறந்து போனவரின் கழுத்தில் தாக்கியதாக மேலும் கூறப்பட்டுள்ளது. முதல் விசாரணையின்போது, எதிரி ராஜேஷின் தந்தையின் கொலை வழக்கில் தொடர்புடையவரும், உடன் குற்றவாளியுமான இறந்தவர் உள்ளார் என்ற உண்மையையும், குறுக்கு விசாரணையின்போது அவரும், உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர் என்ற உண்மையையும் அ.சா.1 குறிப்பிடுகிறார். குறுக்கு விசாரணையில் சம்பவத்தின்போது அ.சா.1 காயம் ஏதும் ஏற்படவில்லையா என்றும், எதிரி அவரைத் தாக்கவோ, கொல்லவோ எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லையா என்ற சங்கதி குறித்து அவரிடம் குறிப்பாக வினவப்பட்டது. குறுக்கு விசாரணையின்போது, குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள் அவரது சகோதரர் மீது "2-1" சுட்டார்கள்; மற்ற குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் சிலர் வெட்டவெளியில் சுட்டனர் என்று அ.சா.1 குறிப்பிட்டார். எதிரி-3-ன் பங்கை பொறுத்தவரை அவர், ராம்பாலுடன் சேர்ந்து வெட்டவெளியில் சுட்டார் என்றும்,

ராஜாராம் மற்றும் ராஜேஷ் அவரது சகோதரரைச் சுட்டார்கள் என்றும் குறுக்கு விசாரணையில் அ.சா.1 கூறியுள்ளார்.

15. அ.சா.1-ன் சாட்சியத்தை ஆராயும்போது, முதல் தகவல் அறிக்கையிலும், முதல் விசாரணையின்போதும், இவ்வழக்கில் நிறுவப்பட்டுள்ளவாறு சான்றுரையின்போது, சான்றாவணங்களின் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. நாட்டுத்துப்பாக்கியுடன் இருந்த எல்லா குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பங்கு முதலில், இறந்தவரைச் சுட்டது என்பதுதான். பின்னர், குறுக்கு விசாரணையின்போது எதிரி-3-ஐப் பொறுத்தவரை அவர் வெட்டவெளியில் சுட்டார் என்றும் மற்ற 2 எதிரிகள் உள்ளபடியே இறந்தவரின் உடலில் சுட்டனர் என அ.சா.1 கூறியுள்ளார்.

16. அ.சா.1-ன் சாட்சியத்தை ஆய்வு செய்ததில், அ.சா.2 ஜகதீஷின் சாட்சியத்தை குறிப்பிடுவது முக்கியத்துவம் வாய்ந்தது. அவரது முதல் விசாரணையின்போது, எதிரி 3 நாட்டுத்துப்பாக்கியுடன் செயல்பட்டார் என்றும் மற்றும் கியான்வதி (எ-6) ஷிவ் தயாளுடன் இணைந்து முறையே கத்தி மற்றும் கோடரியுடன் இறந்தவரின் கழுத்தில் தாக்கியதாகவும் அ.சா.2 தெரிவித்துள்ளார். கிராமத்து குட்டையிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கும்போது சம்பவத்தை பார்த்ததாகக் கூறப்படும் அ.சா.2 ஒரு சந்தர்ப்ப சாட்சி எனத் தெரிகிறது. அவரது குறுக்கு விசாரணையின்போது, இறந்துபோன சுரேந்தர் கட்டிலிலிருந்து சுமார் இரு சதுரம் அ.சா.1 வேத்ராம் தள்ளி அமர்ந்திருந்ததாக அ.சா.2 கூறியுள்ளார். இறந்து போனவரை யார் முதலில் சுட்டனர் மற்றும் யார் கடைசியில் சுட்டனர் என அவரால்

கூறமுடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார். குறுக்கு விசாரணையின்போது, யாருடைய துப்பாக்கிசூடு இறந்தவரைத் தாக்கியது என அவரால் குறிப்பிட முடியவில்லை என அ.சா.2 மேலும் ஒப்புக்கொள்கிறார். சம்பவம் நடந்தபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் சுமார் 20 கஜ தூரத்தில் இருந்ததாகவும் மற்றும் கோடரியால் எத்தனை காயம் ஏற்பட்டது என தன்னால் கூறமுடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். கத்தியால் எவ்வளவு காயங்கள் ஏற்பட்டது என்று அ.சா.2-ஆல் கூற இயலவில்லை. அ.சா.2-ன் இந்த குறுக்கு விசாரணை ஒன்றுக்கு மேற்பட்ட அம்சங்களில் முடிவு எடுக்கவேண்டிய முக்கியத்துவம் பெறுகிறது.

17. அரசு தரப்பு முழு வழக்கும் என்னவென்றால் நாட்டுத்துப்பாக்கியை வைத்துள்ளதாகக் கூறப்படும் எல்லோரும் இறந்தவரைச் சுட்டனர் என்பதுதான். அரசுத்தரப்பு வழக்கானது அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் குறுக்கு விசாரணையின்போது பெருமளவு நீர்த்துப் போனது. முக்கியமாக, சடலக் கூராய்வு அறிக்கையில் ஒரு துப்பாக்கிச்சூடு காயம் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. அது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எல்லாம் சுட்டனர் என்ற அரசுத்தரப்பு வாதத்துடன் ஒத்துப்போகவில்லை. அது தவிர, சடலக் கூராய்வு அறிக்கையில் இறந்து போனவரின் கழுத்தில் காயம் எனக் காட்டுகிறது. அது குற்றஞ்சாட்டப்பட்ட "எஸ் டி" இருவரும் கோடரியுடன் இருந்ததாகவும் மற்றும் எதிரி-6 கத்தியுடன் இருந்ததாகவும், இறந்து போனவரின் கழுத்தில் தாக்கியதாகவும் அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் வாக்குமூலத்தில் கூறுவது பொருத்தமற்றது.

18. இந்த பதிவுகள் உள்ள நிலையில், அ.சா.1 மற்றும் 2 சம்பவ இடத்தில் இருந்தது பெரும் சந்தேகத்துக்குரியதாக நாங்கள் கருதுகிறோம். அ.சா.1 மற்றும் அ.சா.2-ன் சாட்சியங்களில் உள்ள முக்கிய முரண்பாடுகள் கற்றறிந்த அமர்வு நீதிபதியாலோ அல்லது உயர்நீதிமன்றத்தாலோ காணப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது காணப்படவில்லை. எதிர்த்தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்ட முரண்பாடுகள் சிறிய தன்மையானது என உயர்நீதிமன்றம் கருதியுள்ளது. அரசுத்தரப்பின் அடிவேர் வரை செல்லக்கூடிய அடிப்படைத் தன்மையில் உள்ள முரண்பாடுகளுக்குத் தரப்பட்ட முடிவு, சாட்சியங்களை மதிப்பிடும் பொது ஒருவரால் ஏற்க முடியாததாக உள்ளது. குற்றம் நடந்த இடத்தில் அல்லது அந்த இடத்தில் உள்ள ஒவ்வொரு சாட்சியையும் விசாரிக்க வேண்டிய கடமை இல்லையெனினும், உண்மைகளின் சூழ்நிலைகளில், அருகாமையில் அமர்ந்திருந்ததாகக் கூறப்படும் இறந்து போனவரின் தந்தையை விசாரிக்கத் தவறியது முக்கியத்துவம் பெறுகிறது.

19. மேற்சொன்ன காரணத்தால், எதிரி-மேல்முறையீட்டாளர்கள் 3 மற்றும் 6 சந்தேகத்தின் பயனைப் பெற உரிமையுடையவர்கள் என நாங்கள் கருதுகிறோம். அதன்படி, அலகாபாத்திலுள்ள உயர்நீதிமன்றத்தின் 11.01.2019 நாளிட்ட குற்றவியல் மேல்முறையீடு எண்.5307/2008-ல் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையை நீக்கறவு செய்து, நாங்கள் மேல்முறையீட்டை அனுமதிக்கிறோம். அதன்படி மேல்முறையீட்டாளர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள் மற்றும் பிற

எந்த வழக்கு தொடர்பாகத் தேவைப்பட்டாலன்றி அவர்கள் பாதுகாவலிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

20. ஏதேனும் மனுக்கள் நிலுவையிலிருந்தால் அது முடிவு செய்யப்படுகிறது.

மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."